May 1912. Registered No. M. 925.

செந்தமிழ்ச் செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

[தொகுதி 2.] பரிதாபி ௵ வைகாசி-மீ 1-௨ [பகுதி-2

உள்ளுறை. பக்கம்

பெரியபுராணம்	315
இதுவுஞ்சைவசித்தாந்தசாதனமோ	317
திருப்பெருந்துறை விளக்கம்	319
தேசநன்மைதேடுதல்	323
அக்ஷராவதானவிடை	324
இன்னாசெய்யாமை	325
தமிழ்பாஷைச்சிறப்பு	329
சத்தமாதர் பூஜாக்கணிதவினா	331
பக்தியினன் முக்திபெற்றசண்டிகேசுவரர்	332
கையறுநிலை	335
புத்தகவரவு	336
பலதேசவர்த்தமானம்	337

பத்திராதிபர்:— பண்டிதர், அமிர்தம், சுந்தரநாதபிள்ளை.
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. தபாற்கூலி அணா. 4.
வெளிநாட்டுக்கு ரூ. 2. தனி சஞ்சிகை அணா. 2.

Copy Right Registered.

லெக்ஷ்மி விலாச பிரஸ் திருச்சி.

(Supplement to "SEN TAMIL SELVAM.")

சென்னை பிரசிடென்சி காலேஜ் தலைமைத் தமிழ்ப் புலவர்
பிரமஸ்ரீ மகா மகோ உபாத்தியாயர்
வே. சாமிநாத ஐயர் அவர்கள்
அபிப்பிராயம்.

சிலமாதங்களாக வெளி வந்து உலாவும் "**செந்தமிழ்ச் செல்வம்**" என்னும் பத்திரிகையைப் பார்த்து வருகிறேன்.

சிறந்த வித்வான்களது இருப்பிடமாக விளங்கிய திரிசிரபுரத்தில் இருந்த தமிழ் வித்வான் ஸ்ரீ **அமிர்தம்பிள்ளை அவர்கள்** குமாரரும், எஸ். பி. ஜி. காலேஜ் உதவித் தமிழ்ப பண்டிதருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ அ. **சுந்தரநாத பிள்ளையவர்கள்** இப்பத்திரிகையை நடத்தி வருவதும் தக்கவர்கள் இதற்கு விஷயதானம் செய்வதும் தெரிந்து மிக்க திருப்தியடைகிறேன்.

இத்தகைய பத்திரிகை திரிசிரபுரத்தில் நடைபெற்று வருவது இன்றியமையாததே.

இத்தேசத்துக் கனவான்கள் இதனை ஆதரித்து இதன் பத்திராசிரியருக்கு ஊக்கம் அளிப்பார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

வே. சாமிநாதையன்.

திரிசிரபுரம் மகா வித்துவானும் வித்வஜன சேகரருமாகிய ஸ்ரீமத் கோவிந்தக் கவிராயர் குமாரரும், பெங்களூர் சென்றல் காலேஜ் தலைமைத் தமிழ்ப் புலவருமான வித்துவான்
ஸ்ரீமத் தி. கோ. நாராயணசாமி பிள்ளை அவர்கள்
அபிப்பிராயம்.

அகவற்பா.

மணிநெடுங் கடல்சூழ் *மாநில வரைப்பில்
அணிபெறுந் தமிழகத் தாகுறை தவிர்ப்பான்
சோறுடைத் தாகிய சோழவள நாட்டாள்
சாறுடைத் தலம்பல தழுவிய பொன்னி
ஆர்சிர புரமதில் அமிர்தம் பயந்த
சீரமர் அமிர்தமாஞ் "**செந்தமிழ்ச் செல்வம்**"
தந்த வசனத் தனிச்சுவை யுண்ண
அடைமொழி கொண்டே அங்கங்குச் செல்லும்
§ தாள்பல கொண்டு சார்பவள் அகன்ற
† கூர்மை யிட்டகண் குசாக்கிர மதியள்
அமிர்தி லெடுத்த ‡ஆனவ நீதம்
மாதம் ஒரு §முறை யாகியே வருபவள்
காதலர் மகிழக் காண்பவள் இவளை
புணருற் பவமாப் பொருந்துறச் செய்தவன்

னிலம் + மால் + நிலம். § தாள் = ஏடு. † கூர்மையிட்டகண் = மிகுந்த அச்
யால் எழுதிய இடம். ‡ ஆன = ஆ + ன = பசுவின். § முறை = புத்தகம்.

என்னரு மன்பன் இனியகுணச் செல்வன்
செந்தமிழ்க் கிலக்காய்த் திகழ்ந்தவன் பலநூல்
தந்தர யுக்தி தரச்செய் தாய்ந்தவன்
செந்தமிழ்த் தூதில் செய்நன்றி மறவா
அன்பரை வைத்துத்தன் அகங்குளிர்ந் தார்ந்தவன்
"அமிர்தம் பிள்ளை" என்னுநன் னாவலன்
அருந்தவப் புத்திரன் செந்தமிழ்ப் பாவலன்
செந்நெல் விளைத்த செழுமுளை மீட்டுமச்
செந்நெலே யாவது போலத் திகழ்பவன்
பிறர்க்குப காரம் புரியும் பெற்றியன்
சைவ சமய சமரச மார்க்கன்
இலக்கிய இலக்கண மினிது பல கற்றோன்
தந்தை போலத் தருஞ்சிர புரத்தில்
எஸ். பி. ஜி. காலேஜ் இனியதமிழ்ப் பண்டிதன்
"சுந்தர நாதன்" என்னுந் தூயோன்
அந்தமிழ் வாணர் அறைபுக ழோனே.

வெண்பா.

"செந்தமிழ்ச் செல்வம்" செழித்தோங்க நாளும்
வந்தவழி மாறாது வாழ்ந்திடுக—**"சுந்தர
நாதன்"** கருத்து நனியோங்க நாதனருள்
போதம் விளங்க பொருள்.

சித்தாந்த சரபம்—அஷ்டாவதானம்,
ஸ்ரீமத் பூவை—கலியாண சுந்தர முதலியாரவர்கள்
இயற்றியது.

தித்திக்குஞ் சித்தாந்த மணங்கமழுந் தமிழருமை செவ்வே யோங்கப்
புத்தியினில் யாருமுல கானுபவ மாராய்ந்து பொலிவு கொள்ள
உத்தமனல் லமிர்தசுந் தரநாத நாவலனு முயர்விற் பன்னன்
எத்திக்கு முலவச்செய் **"செந்தமிழ்ச் செல்வம்"** வாழ்க வென்று மாதோ.

சைவ சித்தாந்த மகா வித்துவானும் தருமபுரம் ஆதின வித்துவானும் மதுரைச் சங்கத்துக்கும் சைவ மகா சமாஜத்துக்கும் முக்கிய ஆலோசனைக் கர்த்தருமாகிய திருநெல்வேலி

ஸ்ரீமத் S. பால்வண்ண முதலியாரவர்களின்
அபிப்பிராயம்.

"செந்தமிழ்ச்செல்வம்" என்னும் இப்பத்திரிகை "தமிழ் மொழிக் கடலுட்டங்கிய பல்வளப் பொருள்களையும் யாவரும் ஒருங்கே எளிதிற் பெறுதற்கமைத்த ஓர் பண்டகசாலை போன்றதாம்"; இஃது "அமிர்தம் போன்ற வசனத்தையும் கல்வியழகே தனக்கோரழகெனக் கொண்ட தலைவனையும் பெற்றுள்ளதாதலால் யாவருக்குங் களிபேருவகையளிப்ப தொன்றேயாம்."

TINNEVELLY,
1—3—12.

S. PALVANNA MUDALIAR.

செந்தமிழ்ச்செல்வம்

ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பகுதி-2.]   பரிதாபி-ஹூ வைகாசி-மீ 1-உ   [தொகுதி-2

பெரியபுராணம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

பெரியபுராணம் என்னும் பெயரிய நூலின் பெயரைக் கேளாதவர் நமது தமிழ்நாட்டி லிருப்பரென்று நினைப்பதற்குச் சிறிதுமிடமில்லை.

இது, சிவபெருமானே கடவுளென முற்பிறப்புகளிற்செய்துள்ள புண்ணியப் பேற்றி னுணர்ந்து அவ்வெம்பெருமாற்கே திரிகரணசுத்தியோடு ஈடுபட்டு வழிபட்டு சிவபுராணங்களில் உணர்த்தப்படும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அநுட்டித்து முத்தி பெற்ற மெய்யடியார்களுடைய அடிமைத் திறத்தை விளக்குவதாகிய ஓர் நூலாம்.

சர்வாதிகாரிகளாகிய ஆதிசைவருக்கும் பிறருக்கும் தான் அதிகரித்த தனியடியார் அறுபத்துமூவரும் தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத்தொண்டர் எழுபத்திருவருடைய சரித்திரங்களை யுணர்த்துவதாகிய நூலுக்கே பெரியபுராணமெனப் பெயராயதென்க.

இந்நூல் தன்னை அத்தியந்த ஆசையுடன் ஓதுபவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் பத்தி வைராக்கிய ஞானங்களைப் பாலிப்பிக்குங் கருவியாம்.

சிவபெருமான் றிருவருளினாலே பாடப்பட்ட அருட்பாக்களில் பெரியபுராணமு மொன்றே.

சிவபெருவான் றிருவருளினாலே தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் பெரியபுராணம் என்பன தோன்றினவாம்.

முற்காலத்தில் இராஜராஜ அபயகுல சேகர சோழ மகாராஜா கேட்டுக்கொண்டபடி நம்பியாண்டார் நம்பியால் வகுக்கப்பட்டனவாகிய பதினொருதிருமுறைகளுடனே திருத்தொண்டர் பெரியபுராணம் ஒன்றுங்கூட்டிப் பன்னிரண்டு திருமுறைகளெனப் பெரியோர்கொண்டாடிவருகின்றனர்.

இப்பெரியபுராணம் திருவாரூரிலே சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய வன்மீகநாதர் தம்முடைய திருத்தொண்டர்களது அடிமைத்திறத்தை ஆன்மாக்கள் உய்யும்படிப் பாடும் பொருட்டு அநுக்ஞைசெய்து, "தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்று அடியெடுத்துக்கொடுக்க சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதினொரு திருப்பாட்டினாலே திருத்தொண்டத்தொகை என்று பெயர்தந்து ஒருதிருப்பதிகம் பாடியருளினார். அத்திருத்தொண்டத் தொகைக்கு திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப் பிள்ளையார் பொருள் சொல்ல, பாலியதசையிலேயே வேத சிவாகமாதி சமஸ்த சாஸ்திரங்களையும் அவரிடத்திலே யோதியுணர்ந்த ஆதிசைவராகிய நம்பியாண்டார் நம்பியானவர் அதனை வகுத்துக் கட்டளைக் கலித்துறையினால் ஒரு திருவந்தாதி செய்தருளினார். அதற்கு நம்பியாண்டார் நம்பியந்தாதி என்பது பெயர். பிறகு இதனை அருண்மொழித் தேவரென்னும் சேக்கிழார் சுவாமிகள் அநபாய சோழமகாராஜாவின் வேண்டுகோளின்படி திருத்தொண்டர்களது புராணம்பாட சிதம்பரஞ்சென்று சபாநாயகரைத் தரிசித்து வேண்ட உடனே சபாநாயகரின் திருவருளினாலே "உலகெலாம்" என்று ஒரு அசரீரி வாக்கு எழுந்தது. அத்திருவாக்கை முதலாகக் கொண்டு புராணம்பாட ஆரம்பித்துச் சிலகாலத்துள் பாடி முடித்து அதற்குத் திருத்தொண்டர் புராணமெனப் பெயர்தந்தார்.

இனி, திருத்தொண்டர்களது புராணத்திற்குப் பெரிய புராணமெனவே பெயர் வழங்கிவருகிறது.

பெரியபுராணம் என்பதற்கு மற்றைப் புராணங்களைக்காட்டினும் உருவத்திற் பெரிதாயிருப்பதால் இதற்குப் பெரியபுராணமெனப் பெயர்வந்ததென்பர் ஒருசிலர். அஃது அத்தனைப் பொருத்தமுடையதன்று பெரியவிஷய மடங்கிய தென்றாவது, பெரியவர்களைப் பற்றிச் சொல்லப்பெற்றிருப்பதென்றாவது பொருள் கோடலே சாலச் சிறந்ததாகும்.

ஏனெனில் பெரியதேதென அரசன் தெய்வப்புலமை ஔவையைக் கேட்ட பொழுது "பெரிது பெரிது புவனம் பெரிது" என்று தொடங்கிய அகவலில் "இறைவர் தொண்ட ருள்ளத் தொடுக்கம், தொண்டர் தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே" என்று கூறியதனால் தொண்டரும் அவர் பெருமையும் பெரியது! மிகப்பெரியது!! இன்னும் இறைவற்குச் செய்யும் பூசையை "ஈஸ்வரபூசை" என்று கூறி ஈஸ்வரனடியவர்களுக்குச் செய்யும்பூசையை "மகேஸ்வரபூசை" என்று கூறுகின்றனர், "மகா" என்னும் சப்தம் அவர்கள் பெரியவர் என்பதை விளக்குகின்றதன்றோ.

இன்னும் பெரியபுராண வரலாற்றைத் திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தாம் அருளிச்செய்த சேக்கிழார் சுவாமிகள் பிள்ளைத்தமிழில் தாலப்பருவத்துள்ள

அடியார் பெருமையு மருமையு நாளும்
அறியம் பலவாணர்
அவர் வரலாறு விரித்துரை செய்பவ
ராரென வுட்கருதிக்
கடியார் மற்றவ ரன்பத் தனையுங்
கண்காண் படிசெய்து
காமரு முதலு மெடுத்தரு ளினரிக்
கடல்சூழ் புவியிடையிப்
படியார் பெற்றூர் தமிழ்மான் மியமெப்
பாடைகளுக் குளதிப்
பாக்கிய நந்தவ மென்று பலோரும்
பகரப் படுபவதிந்
தடியார் தடிசூழ் குன்றத் திருமுனி
தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல்
தாலோ தாலேலோ.

அருமைப் பாவும் பிறவும் நன்கு விளக்கும்.

பத்திராதிபர்.

இதுவும் சைவசித்தாந்த சாதனமோ.

தமிழ் நேயர்காள்! சைவசித்தாந்தச் செல்வர்காள்! தங்களுக்கோர் விநயபூர்வகமான விஞ்ஞாபனம்.

நாளது சித்திரை-மீ 1-உயுல் பிரசுரமான திரிசிரபுரம் "செந்தமிழ்ச்செல்வ"மெனும் பத்திரிகை 303-304-305-ம் பக்கங்களில்சைவ

சித்தாந்த சாதனமென ஓர்விஷயம் நமது நண்பர் மகா-ா-ா-ஸ்ரீ ஹர. ஷண்முகமுதலியாரவர்களால் வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் ஆரியவேதமென்பது ஆரியருடைய வேதமெனப் பெயர் பெறு மெனவும் 'ஆரியர்கள்' என்பவர்கள் ஆரிய தேசத்திலிருந்து சிலவாயிர வருடங்கட்குமுன் இத்தமிழ் நாட்டுக்கு வந்ததாகச் சரித்திரக்காரர்கள் கூறுகிறார்களெனவும் இருக்காதி நால்வேதம், தற்காலத்தில் வழங்குவன. எப்போது யாரால் இத்தேசத்தி லுண்டாயிற்றென்றால் ஆரியர் படையெடுத்துவந்தகாலத்தில் அவருடன்வந்தபுறச்சமயம், நால்வேதமென்றும் இப்போது வழங்கும் ஆரியரின் நூதன இருக்காதிவேதம் நான்கிற்கும் 'நந்தமிழ்' மறைக்குஞ் சம்மந்தமே யில்லையென்றும் குரானுக்கும் விவிலிய நூலுக்கும் என்ன பொருத்தமோ அதே தான் ஆரியர் வேதத்திற்கும் தமிழ்மறையாகிய ஆகமத்திற்கு மென்றும் பின்னுஞ் சில வெழுதி யிருக்கிறார்கள்.

இவர்கள் கூற்றுமிக்க ஆசங்கையையுட்கொண்டு நமதுபூர்வீகாள் கொள்கைக்கு முற்றும் முரண்படுகிறது. ஆரியவேதமும் சைவத்திருமுறைகளிலொன்றாகிய திருமந்திரமு மொன்றுக் கொன்று மாறுபாடு கொண்ட பொருளுடையதா வென்பதை விசாரிப்பாம். சைவத்திருநெறித் தமிழ்த்திருமுறைகள் கக-ல் திருமந்திரம் க0-வதுதானத்தை வகிக்கப்பெற்றுளது. மூந்தின கூ-திருமுறைகளுந் தேவார திருவாசக முதலானவையாயுள்ளன. ஔவைப்பிராட்டியா ரருளிச்செய்த 'தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும், மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை, திருவாசகமுந் திருமூலர் சொல்லும், ஒருவா சகமென் றுணர்.' எனும் வெண்பாவினால் நான்குமறையின் பொருளும் க0-வது திருமுறைதிருமந்திர முள்ளிட்ட தமிழ்மறைகளும், வியாசமுனிவ ரருளிய வேதாந்த சூத்திரமும் அபேதமென விளங்குகிறது. திருமூலநாயனாரருளிய திருமந்திரமாகிய தமிழ்தான் நான்மறை யென்று முதலியாரவர்கள் கூறுகின்றார்கள். நான்மறையென்றால் நான்குவேதங்களெனப் பொருள்படுகின்றதே. திருமந்திரம் மூவாயிரஞ் செந்தமிழ்களாக வல்லவோ விளங்குகின்றது. மேலும் மேல் வெண்பாவினால் நான்மறையை வேறாகவும், திருமந்திரத்தை வேறாகவும்பிரித்துக் கூறியிருப்பதினால் திருமந்திரந்தான் நான்மறையென்று நம் நண்பர் கூறியது வெற்றுரையாயது. திருமந்திரத்திலேயே "ஆரியமுந்தமிழு முடனேசொலிக் காரிகையார்க்குங் கருணைசெய்தானே."

(இன்னும்வரும்) திரு. சாம்பசிவம்பிள்ளை.

திருப்பெருந்துறை விளக்கம்.

(298-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறும் செய்த ௧, ௨, ௩, ௪, சங்கைகளின் ஆராய்ச்சியில் திருப்பெருந்துறை யென்பதற்குப் பெரிய கடற்றுறைமுகப் பட்டினமெனப் பொருள்கொள்வது ஆதாரவற்றதெனப் பல பிரபலபிரமாணங்களால் தெளிவாய்க் காட்டியிருக்கிறபடியால் ஆளுடையார் கோயிலானது கடற்றுறைமுகப் பட்டினமா யெக்காலத்து மிராது தான். அவ்வாறிருக்கவேண்டு மென்றெதிர்பார்த்தல் மலடு கறந்தெய்த்தல் போலாம். இன்னொரு விடயமிங்கு குறிக்கவேண்டியிருக்கிறது. நமது சமயாச்சாரிய சுவாமிகளும் மற்றைத் தமிழ்க்கவிவாணர்களும் யாதாமொரு தலத்தைக்குறித்துப் பாவினத்தாற் றோற்றரிக்குங்கால் அத்தலமமர்ந்த திணையின் கருப்பொருளை விசேடமாகப் புகழ்ந்து கூறுவது தமிழின் பண்டையமரபா யிருக்கிறது. குறிஞ்சிநிலத்தலமாயின் மலையையு மதற்கடுத்த பொருளையும் முல்லைநிலத் தலமாயின் முல்லைநிலப்பகுதிமுதலியவற்றையும் மருதநிலத்தலமாயினதின்கருப்பொருளாகிய மருதநிலத் திணை முதலியவற்றையும், நெய்தநிலத் தலமாயின் கடலையு மதற்கடுத்த பொருளையும் தமிழிலக்கண நூலுக்கு விரோதமன்னியில் வேண்டியமட்டுஞ் சிறப்பித்துச் சொல்லி யிருக்கிறார்கள். தலந்தோறுமுள்ள தேவார முதலிய தோத்திரப்பாக்களை நம் நண்பர்கள் ஆராய்ந்தால் இதினுண்மை புலப்படும். மாணிக்கவாசகப் பிரபு தாமருளிய ஸ்ரீவாசகத்தில் திருப்பெருந்துறையைக்குறிக்க நேரிட்டபோதெல்லாம் "சிறைக்கணே புன்னில வியவயல்சூழ் திருப்பெருந்துறை" எனவும் "சேலும் நீலமும் நிலவிய வயல்சூழ் திருப்பெருந்துறை" எனவும் 'சீதவார் புன்னில வியவயல்சூழ் திருப்பெருந்துறை' எனவும் "திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறை" யெனவும் "செடிகொள்வான்பொழில் சூழ்திருப்பெருந்துறை" யெனவும் மருதநிலத்துக்குறிய கருப்பொருளாகிய கழனியைச் சிறப்பித்தார்களேயொழிய நெய்தநிலத்துக்குரிய கடலையாவது குறிஞ்சிநிலத்துக்குரிய மலையையாவது மறந்தாவது ஒருவிடத்துங் கூறினார்களிலர். இதினாலும் திருப்பெருந்துறையெனுந்தலம் சமுத்திரக்கரையை அல்லது மலையையடுத்த தலமல்லவென நிதரிசனமாக விளங்குகிறது. இத்தோடு இவ்வாராய்ச்சியை நிறுத்தி ௫-வது சங்கையாகிய மாணிக்கவாசக சுவாமிகள் மேலதிக்கிலுள்ள பெரிய கடற்றுறைமுகத்துக்குச் சென்றிருப்ப

தாக வாதவூரர் புராணத்திற் சொல்லி யிருப்பதாக நம் நண்பர் கூறுவதில் ஏதேனும் உண்மையிருக்கிறதா வென்பதை ஆராய்வாம். இவ்விடயமாய் வாதவூரர்புராணத்துள்ள செய்யுட்களை மேலேஉதகரித்துள்ளாம். நக-வது செய்யுள் "நெடுங்குடதிசைக் கடனிறைந் தொலிசிறந்தே" எனும் முற்பகுதியுடைய செய்யுளால் கீழ்திக்கை நோக்கி வாதபுரீஸ்வரர் குதிரைகொள்ளச்சென்றாரென வேற்படுகிறதேயன்றி மேல்சமுத்திரம்நோக்கிச் சென்றதாகக் கூறுஞ்செய்யுள் திருவாதவூரர்புராணத்தி லெங்கேனுமில. இருப்பதாகச் செய்யுளை உதகரித்து யாரேனும் வெளிக்கு வரவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். இனி எ-வது விடயமாகிய திருப்பெருந்துறை மேலநாட்டி லிருப்பதாகத் திருவாசகத்திலேயே மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்திருப்பதாக நம் நண்பர்கள் சொல்லும் விந்தையை ஆராய்வாம். ஐயரவர்கள் இதற்காதாரந் திருவாசகத்திலிருந்து காட்டினார்களில்லை மகாா-ா-ஸ்ரீ பொன்னம்பலம் பிள்ளையவர்களு மிவ்விஷயத்தில் திரிபுணர்ச்சிகொண்டு விவாத (Tamilian Antiquary)1909-ஹுத்திய 4-நிம்பர் ஆங்கில சஞ்சிகையில் 71-வதுபக்கத்தில் மிக்கவேடிக்கையாய் முழுப்பூஷணிக்காயைச் சோற்றில் மறைத்ததுபோல் எழுதியிருக்கிறார்கள் கொச்சி தேசத்திலுள்ள திருப்பணித்துறை தான் திருவாசகத்தில் ஆண்டிருக்கிற திருப்பெருந்துறை யென்றே சொல்வதற்குத் திருவாசகத்திலேய உள்ளீடான சாட்சிய மிருப்பதாயும் "குதிரையைக் கொண்டு குடநாடதன்மிசைச் சதுர்படச்சாத்தாய்த் தானெழுந்தருளியும்" எனும் ஆளுடைய வள்ளலாரருள் வாக்குத்தான் தன் கொள்கைக்கு ஆதரவுபோலும் சில வெழுதி யிருப்பதுடன் கொச்சிநாட்டுக்குமற்றொரு பெயராகிய குடகு நாட்டைத் தான் மேல் வாக்கியத்தில் குடநாடெனப் பிரயோகித்திருப்பது போலும் பிள்ளையவர்கள் ஏதேதோ ஆகாயக்கோட்டை கட்டுகிறார்கள் இதை வாசிக்கும் நண்பர்கள் சுலபமாயறியும் வண்ணம் மேல்கண்ட வாக்கியங்களடங்கிய திருவாசகம் கீர்த்தித்திருவகவலின் சிலபாகத்தை யடியிலெழுதுவாம்.

க. ஏறுடை யீசனிப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும் வந்தருளிக்
குதிரையைக் கொண்டு குடநாட தன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்

ஐ. வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்

தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டு கொண்டருள வழகுறு திருவடி
பாண்டியன் றனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனக மிசையப் பெறாஅது
ஆண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி யாண்டுகொண் டருளி
யிந்திர ஞாலங் காட்டிய வியல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்
ஆங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்."

என்பதே. இங்குகாட்டிய உங-அடிகளில் கக-வது முதல் உங-அடிவரையில் தமக்காகக் கடவுள்புரிந்த அற்புதலீலைகளைத் தொடர்ச்சியாயு மருமையாயும் மாணிக்கவாசகப் பிரபு அருளியிருக்கிறார்கள் அதற்குமேல் ரு-முதல் க௦-வது அடிவரை வேறு ங-சிவ தலங்களில் சிவபிரான் வேறு சில அடியார்கள் பொருட்டு நடாத்திய திருவிளையாட்டைப் புகழ்ந்திருக்கிறார்கள் அதற்குமேல் க-முதல் ச-அடிகளின் வரை சிவபிரான் குதிரைச்சேவகராய்க் கோலங்கொண்டெழுந் கருளி ஓர்சரித்திரங் கூறப்படுகிறது. இன்னார் பொருட்டென வியக்தமாயருளப்பட்டிருக்கவில்லை. மேல் உதகரித்திருக்கும் வாக்கியங்களில் கக-வது அடி முதல் உங-வது அடி வரைத் தம்பொருட்டுக் கடவுளாற் செய்த லீலைகளைச் சவிஸ்தாரமாய்ப் புகழ்ந்து கூறியும் ரு-வது அடிமுதல் க௦-வது அடிவரை வேறுதலங்களின் மகிமையைக் கூறியு மிருக்க முதனான்கடியிலுமுள்ள அஸ்வாரோஹண லீலை மாணிக்கவாசக சுவாமிகள் பொருட்டு நடந்ததுதானோவென வையமுறக்கிடக்கிறது கூறியதுகூறல் எனுமிலக்கண வரம்பிற்குப் பொருந்தாமையு மாயுமிருக்கிறது சுந்தரேசுவரர் குதிரைச்சேவகராய்வந்து திருவிளையாட்டுப்

புரிந்த வேறு ஒரு சரித்திரமுமுள. பரஞ்சோதியாரருளிய திருவிளையாடற்புராணம் ௩0-வது மெய்க்காட்டிட்ட படலத்திலும் நம்பியாரியற்றிய திருவிளையாடற் புராணம் ௩௯-வது மெய்க்காட்டிட்ட திருவிளையாடலிலும் கூறியுள்ள சரித்திரமாக முதல் ௪-அடிகளிலுள்ள சரித்திரமேனிருக்கப்படாது. இச்சரித்திரக் கருத்து சிவபக்தசிரோன்மணியாகிய சாமந்தனெனு மோர் சேனபதியின் பொருட்டு மதுரை மாநகரத்தில் பாண்டியபூபதியின்முன் குதிரையாதிசைனியங்களுடன் கடவுள் தாமுமொரு குதிரைவீரனுகத் தோன்றினரென்பதே. நம்பியாரருளிய திருவிளையாடற்புராணத்தில் இச்சரித்திரங் கூறும் படலத்தின் உ0:வது செய்யுளில் "நடந்தது பெரும்படைச் சாத்து" எனச் சாத்துவெனு மொழிப்பிரயோகங்காணப்படுகிறது. ஸ்ரீவாசகத்திலும் "சதுர்படைச் சாத்தாய்த் தானெழுந்தருளியும்" எனச்சுவாமிகள் திருவாய்மலர்ந்தனர். நமது கவிவாணர்களியற்று மிலக்கிய நூல்களில் மஹான்கள் வாக்கில் உதையமான அருண் மொழிகளையே யந்தந்தச் சந்தர்ப்பத்தில் ரத்தினம் பதித்ததுபோல் வைத்து ஆண்டுவந்திருக்கிறார்களென முந்தியே பலஉதாரணங்களுடன் விரிவாய்க்கூறியுள்ளேம் இதுவுமதற்கொருசான்றும். பரஞ்சோதியாரியற்றிய திருவிளையாடற் புராணத்திலும் மெய்க்காட்டிட்ட படலத்தில் மேல் காட்டிய ஸ்ரீவாசகம் க-முதல் ௪-அடிகளிலுள்ள கருத்தைத்தழுவிச் செய்யுட்க ளியற்றப்பட்டிருக்கின்றன. இதை விரிக்கின் மிகப்பெருகு மானதினுலும் எடுத்தகாரியத்தை முடிப்பதவசியமானதினுலும் அதைவிடுத்துமேல் விஷயத்தை யெழுதுவாம். சாத்து என்றமொழி, குதிரையேறிநடத்துவதில் வலுமையுள்ளோனெனப் பொருள்படும். "ஸாஹி" என்ற வடமொழியின் றிரிபாகக்காணுகிறது, இவ்வாறும், வேறு ஒரு சரித்திரத்தின் பொருள்பட க, உ, ௩, ௪, அடிகள் விளங்குகின்றவெனக் காட்டினேமேயொழிய, மாணிக்கவாசக சுவாமிகள் பொருட்டுக் கடவுளியற்றிய லீலைதான் இவ்வாக்கியங்களுக்குப் பொருளெனக் கொள்வதிலும் எமக்கு ஆட்சேபமில அவ்வாறு பொருள் கொள்வதில் மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திர உண்மையை வெளிப்படுத்தப் பின்னுமநுகூலந்தான். "குதிரையைக் கொண்டு குடநாடதன் மிசைச் சதுர்படைச் சாத்தாயத் தானெழுந் தருளியும்" என்னும்வேதமொழியின் உண்மைப்பொருளைச் செவ்வனே ஆராயவேண்டும்.

(இன்னும்வரும்.)

திரு. சாம்பசிவம் பிள்ளை
Retired Sub-Magistrate, Trichy.

தேசநன்மை தேடுதல்,

இராஜப் பிரதிநிதியின் சட்டசபை அங்கத்தினரும் மிகுந்த தேசாபிமானருமான நமது ஸ்ரீமான் கோகலே, சென்றஆண்டு அச்சபையில் இலவசமானதும், கட்டாயமுமான படிப்பு, யாவர்க்கும் புகட்டல் வேண்டுமென்ற விஷயம் பிரேரபித்ததை யாவரு மறிவார்களன்றோ?

அதனைச் சென்ற மாதம் 18-ம்தேதி யன்றே தீர்மானிக்கப்பட்டு அந்தோ! தள்ளப்பட்டதென்பதைக் கேட்டும் யாவரும் வியசனப்படுவார்களென்பதற்கு சிறிதும் ஐயமில்லை. இது வெகுசீக்கிரம் சட்டமாகி அமுலுக்குவரும். நம் நாடு வெகுவிரைவில் நற்கதியடையும், கஷ்டகாலமும் அறிவீனமும் ஒழியுங்காலங் கிட்டிற்று எனப்பலவாறு எண்ணாதவர் இலர். அந்தோ! நம் நாடு இவரைப் போன்ற தேசாபிமானிகளைப் பெற்றிருந்தும் அவர்களால் பிரரேபிக்கப்படும். பல அரும் பெரும் விஷயங்கள் பலவிடையூறுகளால் தடைபடுவது நாமும் நம்நாடும் செய்த துர்ப்பாக்கியமன்றோ.

இவர் அச்சபையின்கண் இதைப்பற்றி பேசும்பொழுது யாவர்க்கும் கல்வி புகட்ட வேண்டுமென்று இந்திய துரைத்தனத்தார் முதல் முதல் ஆரம்பித்த 1855-ம் வருடமிருந்து 1901-வரை அவர்களால் முழுஜனசங்கையில் நூற்றில் இருவரே அதாவது ஏறக்குறைய 32-லட்சம் பையன்களும் 5-லட்சம் பெண்களுமே கல்வி பெற்றிருக்கின்றனவென்றும் 1901-முதல் 1911-வரையான 10-வருடத்தில் 7½-லட்சம் பையன்களும் 1¾-லட்சம் பெண்களுமே அத்தொகையில் அதிகமாயிருக்கின்றனவென்றும் இம்மாதிரியாக கல்விபரவுமாயின் இப்பொழுதிருக்கும் பள்ளிக்குச் செல்லும் வயதுடைய பையன்கள் யாவரும் கல்விபெற இன்னும் ஏறக்குறைய 115-வருடங்களும், பெண்கள் கல்விபெற 665-வருடங்களும் செல்லவேண்டுமென்றும், இதனை துரிதப்படுத்துதற்கு கட்டாயகல்வியே தகுதியான வழியென்றும்யாவரும் கல்விபெறுதலினாலடையும் நன்மைகளையும் வெகுவாய் விரித்து எடுத்துரைத்தார்.

இவைகளுக்கு எதிராக துரைத்தனத்தார் இதற்குவேண்டியபெருந்தொகை இப்பொழுது இல்லையென்றும், இத்தகைய சட்டம் ஏற்படுதற்கு இது தக்க சமயமன்றென்றும் இன்னும் பல சிறிய ஆக்ஷேபனைகளைக் கொண்டும் அதனை தள்ளிவிட்டார்கள். அந்தோ! துர்ப்பாக்கியம்!! துர்ப்பாக்கியம்!!!

அவர் பேசுமிறுதியில் தான் பிரரேபித்தது தள்ளப்படு மென்ப தையறிந்து சொல்லிய சிலவாக்கியங்கள் அதனை வாசிக்கும் ஒவ்வொ ருவருடைய மனதையும் உருக்குகின்றது அதாவது தன்விஷயம் அன்று தள்ளப்படுமென்றும் அதனால் அவர் மனவருத்த மடையப் போகின்ற தில்லையென்றும், எவ்வூரிலும் ஓர் நன்மை பயக்கும் சட் டம் பலதடவை தள்ளப்பட்டபின்பே கொள்ளப்படு மென்றும், தன் னைப்போன்ற இன்னும் அரிய விஷயங்களை சட்டமாக்கக்கொண்டுவரு பவர்கள் இக்காலத்தில் தோல்வி யடைந்தே தம் தேசத்திற்கு ஊழி யஞ்செய்தல் கூடுமென்றும் தங்களுக்குப் பின்வருபவர்களால் அவை கள் சித்திபெறுமென்றும் இவ் ஊழியங்கள் சிறிதெனினும் அவைக ளிலேயே தாங்கள் திருப்தியடைதல் வேண்டுமென்றும் அவைகள் இனிவரப்போகும் சீர்திருத்தங்களுக்கு அஸ்திவாரக் கற்கள்போன்ற தென்றும் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு தோல்வியைக் கருதாது தம்நாட்டின் நன்மையையே கருதி உழைத்தல் வெண்டும் என்றும் சொல்லிமுடித்தார். இவரன்றோ உண்மைத் தேசபக்தர்.

உண்மையுரைப்போன், ·

அக்ஷராவதான விடை.

9-4-12-ல் வெளியான சமதருமைச் "செந்தமிழ்ச்செல்வ"த்தின் 290-வது பக்கத்திற்கண்ட வினாவிற்குக் கீழே அளித்திருக்கும்விடை யைக்காண்க.

"பத்தியுளோர்க் கருள்பொழியு மெம்பெருமான்
  கந்தனுறை பழனிவாழுஞ்
சித்திவிரும் பியமுத்த ஞசரியி "னெழுத்
  தவதான வினா"விற்குச்
சத்தியருள் பெற்றுவளர் சன்மார்க்க
  கங்கா ஜடேச சர்மா
யுத்தியதாய்ச் "சுந்தர நாதம்பிள்ளை"
  விடையெனவே யுரைக்கின்றாரே."

விடை சுந்தரநாதம்பிள்ளை. இவ்வ 10 எழுத்துக்களையும் வினா விற்கண்டபடி முறையேமாற்றிப்படிக்கிற் பலபொருள்புலப்படுவதைக் காணலாம்.

R. S. G.

பழநிஸ்தலம் S. S. S. V. கம்பனி ஸ்டேஜ்மானேஜர் ஸ்ரீமான் வே. முத்தனுசாரியாரவர்கள் பங்குனிமாதத்திய பத்திரிகையின் 290 ம்பக்கத்தில் கேட்டிருந்த அகூஷ்ராவதான விடுகதைவினாவிற்குவிடை.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நாடக சாலை தன்னை நயம்பெற நடத்தி வைக்கு
மேடவிழ் தாரி னல்ல வெழின்முத்த பத்த னார்சொற்
கூடகக் கவியிற் போந்து புகுந்தபே ரியாதோ வென்னி
னூடுதற் கரியசுந் தரநா தம் பிள்ளையெனு நாமந் தானே.

வேறு.

விடுகதை. விடைவேண்டும்.

நேரிசை வெண்பா.

தலைபோய்த் தலைகாட்டுந் தன்னிடை போகின்
முலைகாட்டி முந்நீரின் மூழ்குங்—கலைவலோர்
மூவ்வுயிர் மெய்யதற்கு முக்கண்ணன் றந்தானென்
றிவ்வுலகிற செப்புவா ரே.

கூ. ஐயாக்கண்ணு முதலியார்.
தமிழ்ப்பண்டிதர், செவ்வாய்ப்பேட்டை.

இன்னுசெய்யாமை.

இன்னு செய்யாமை யென்பது தன்னைப்போலவே பிறவுயிர்களை யும் பாவித்து உயர்திணைப் பகுப்பினைச் சார்ந்த மானிடர் மாட்டும், அஃறிணையின் பாற்பட்டவிலங்குகள் பறவைகள் முதலாய ஜந்துக்கள் மாட்டும் மறந்துந் தீமைபுரியா திருத்தலே. உலகில்தனக்குப் பிறர் வன்சொற்கூறி ஓர் இன்னுத்தொழிலைப்புரியின் தான்மீண்டு மப்பழிக்குப் பழிவாங்குதலே பெரும்பான்மையும் வழக்கமாக இராநின்றது. இத னால் விளையுந் தீமைகள் பல. அவற்றுட் சிலவற்றை யீங்குக்கூறுதும்.

ஒருவன் பிறிதொருவனுக்குப் பழிசெய்ய வுன்னுவனேல் அப் பழிக்காகக் கரவுக்குணத்தை மேற்கொண்டு அதுமுற்றுப்பெறுமாறு வெகுளியையு முடன்கொள்ளுகின்றனன்; பின்னரிக்குணமேயிடவே பிறர்க்குந் தீமைகற்பிக்க வேளர் தூண்டுகோல் போலுமாகி, முடிவில் தான்கெடுவதன்றித் தன்னைச்சார்ந்துள்ள மற்றியாவரையுங் கெடுத்து யாவராலுமிகழ்தற்குறிய பாவியாகின்றான். இஃதின்மன மாகலின் யா வருந் தீத்தொழில்களைப் புரியாது தங்களைக்காக்கக்கடவர். நமக்கொ

ருவன் கெடுதி செய்கிருனென வைத்துக் கொள்வோம். அப்போது அவன் யாதுகாரணம்பற்றிக் கெடுதிசெய்கிருன்? நமக்கு மவனுக்கும் பகையாதேனுமுளதா? அன்றிப் புல்லாது மதியைக்கேட்டுத் தன்சுய புத்திமாறிக் கூடியற்ற முன்வருகின்றனனு? என்ற இன்னோன்ன செய்திகளை நாம் தீர ஆலோசிக்கவேண்டும். பின்னாக்குற்ற மியற்றியோற்குப் பெயர்த்தும் நாம் பழியியற்ற நினையாது அவனை நல்வழிப் படுத்தும்படியான ஓர் நெறியைத் தேடவேண்டும். அந்நெறியாவது 'இன்னு செய்தாரை யொறுத்த லவர்நாண, நன்னயஞ் செய்து விடல்' என்ற தேவர் நீதியின்படி நமக்குத் தீமைசெய்தவனுக்கு அவன் இனி யென்றென்றுந்தீமை யெவர்க்கும் புரியாமல் நாணுதற்கேதுவாயவோர் நன்மைத்தொழிலை யவனுக்குச் செய்யவேண்டியதுதான். இந்நன்மை யைச்செய்வது அவன் பின்னர்த் தீநெறிகளிற் போகாவாறு அவனுக் கிடித்துப் புத்தி புகட்டிய வாறாகுமென்க. முதலிலெவ் வெவர்க்கும் இந்நற்குணம் பொருந்துவது மிகவுமரிதாயினும் பயிலப்பயிலமிகளளி தாகுவதன்றி முடிவிலுண்டாம் பயன்கள் இத்துணையவெனச் செப்பு வொண்ணுதென்க.

'தன்னுயிர்க் கின்னுமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னு செயல்'

என்றவாறு ஒருவன் பிறர்க்குத் தீதியற்றத் துணியுங்கால் ஓர் கெடுநெறி தனக்கு நேரின் வருந்திமையை யறிந்திருந்தும் பிறர்க்கின் னுவியற்ற மனந்துணியுவகை யிருந்தபடி என்னே! இது பெரு வியப் பன்றோ? இவருக் கெடுநெறி யென்றது தனக்கு நேரும் பிராணபாய மாயவிபத்தென்க. மிக நுண்ணிய கருத்தமைந்த இக்குறட்பாவை யுன்னுந்தோறுஞ் சாலவு மனத்துக் கின்பம் விளைகின்றது. தன்னைப் போலத்தானே பிறர் என்றதை யிவனறிந்திருந்தும் அறியாதவன் போலத் தீமையியற்ற மனந்துணிவதென்னையோ? வறியேம் அங்ங னந்தீதியற்றத் துணிகின்றுன் கண்ணோட்டமு அருளுமில்லாதவனுத லோடு வெகுளியையுந்தனக்கு நெடுந்துணையாக வமைத்துக்கொள்ளு கிருன். என்னை? தீமொழிகளை யாதல் அன்றி தீவினைகளை யாதல் புரிய முன்வருபவன் மனக்குரோதத்துடன் கூடியிருப்பவனென்க. இனிய மொழிகள் நம்மிடத்திருக்க இன்னுதவற்றைக் கூறுவது புசிக்க நறுங் கனிகளிருக்க வறிய செங்காய்களை யருந்துதல் மானுமென்க, கல்வி, கேள்வி, அன்பு, அருள், அடக்கம், பொறையாதிய சற்குணங்களொ ருங்கே வாய்ந்தபேரறிவினர், தம்முயிர்க்கிறுதி வருவதாயிருப்பினும்

பிறர்க்குத் தீமையாற்றக் கனவிலுநினையார். அன்றியு மவர் தமக்குத் தீமைசெய்வார்க்கும் நன்மையையே மாறாகச் செய்வரென்க. 'இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்கா, லென்ன பயத்ததோ சால்பு' என்று பெருநாவலர் நூலைப்போந்தமையின், தீமை புரிந்தவர்க்கும் நன்மை செய்யாவிடில் ஒருவரது (எல்லாக்குணங்களு நிறைந்த) 'சால்பெ'ன்ற வமைதிக்குணமென்படும்? அழிந்துபடுமென்க. பிறந்த நாள் தொட்டுப் பாண்டவர் துரியோதனாதியரோடு மனமொக்க நேசித்தும், கௌரவர் பாண்டவர்மேல் பொறாமையும் வஞ்சனையும் பாராட்டி எத்தனையோ வழிகளால் அவர்களைக் கொல்ல முயன்றனர். 'கள்ளமனந் துள்ளு'மென்றவாறு கௌரவர் மனம்பொறாது புரிந்த பொல்லாங்குகளனைத்தும் பொறுத்து மீண்டுமவர்பாற் கருணை கூர்ந்து, சந்திசெயத் துணிந்தும் அக்கொடிய வஞ்ச நெஞ்சுடையோர் ஒருப்படாததாலன்றோ முடிவில் பாண்டவர் அவர்களைச் சமர்க்களத்து மாய்த்தொழித்தனர். சிலர் தாம் இன்னா வினைகளை இயன்றவரை சலியாதியற்றிப் பிறரை நன்னெறியிலொழுகப் புத்திபுகட்ட முன் வருவதைப் பன்முறையுங் கண்டிருக்கலாம். இத்தகைப்போலி முழுமக்கள் தம்தன்மையையுணராது பிறர்க்குப்போதிக்கப் புகுவது வியப்பினும் வியப்பே, 'நீவிர் நன்னெறிவழாது நடுநிலையாக நன்கு ஒழுகுகின்றீர் கொல்?' என்று பிறிதொருவர் இக்கயவரை வினவின் அக்கணமே இவர் தன்மை வெளிவந்துவிடும், ஆகலே எவரு முதலிற் றம்மிடத்துக் குற்றமில்லாது பாதுகாத்துக்கொண்டு பரிசுத்தராயிருந்த பின்னர்ப் பிறர் குற்றங்காண வல்லரே லன்னவர்பால் பிழையணுவு மணுகாதென்க இத்தகைமை பெரும்பான்மையும் அரசர்மாட்டு இன்றியமையாதிருத்தல்வேண்டும். இதனையன்றோ

'தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு'

என நம் நாயனார் வலியுறுத்திக் கூறியிருக்கின்றனர்.

'எனக்குத் தகவன்றா லென்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் றானாய்த்—தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் றென்னவனுங் காணா
ரெனச்செய்யார் மாணா வினை.'

என்ற பழமொழியின் வாசகத்தால் பொற்கைப் பாண்டியனது அரசாட்சிச் சிறப்பு நன்கு தெரியலாகிறது.

பிறரைத் தீமைசெய்யாது காத்துச் சிறிதுங் குற்ற மற்றவனுகிய என்மீது அம்பெய்த விக்குற்றத்தை நீ செய்தால் அது தீங்கன்ரே, என்ற கருத்தமைந்த

'தீமைதான் பிறரைக் காத்துத் தான்செய்தா றீங்கன்ருமோ
தூய்மையு மன்றி நட்புந் தருமமுந் தழுவி நின்ருய்'

இவ்வினவை யுத்தகளத்தே ஸ்ரீராகவனது சரத்தைத் தன் உரத்திலேற்று மிகஉரத்துக்கூவிய வாலி மனம்பொருது கடுஞ்சினத்தோடு கேட்டபோது ஸ்ரீராகவன்

'பிலம்புக் காய்நெடு நாள்பெய ரா்யெனைப்
புலம்புற் றன்வழி போதலுற் ருன்றனைக்
குலம்புக் கான்றமு தியர்கு றிக்கொணீ
யலம்பொற் ருரவ னேயர சென்றலும்'

'வான மாளவென் றம்முனை வைத்தவன்
ருனு மாளக்கி ளையினி றத்தடிந்
தியா னு மாள்வனி ருந்தரசாள்கிலே
னான மான வுரைபகர்ந் தீரென'

'பற்றி யான்றப டைத்தலை வீரரு
முற்று ணர்ந்தமு தியரு முன்பரு
மெற்று நும்மர செய்துவை யாமெனக்
கொற்ற நன்முடி கொண்டதக் கோதிலான்'

'வந்த வுன்னைவ ணங்கி மகிழ்ந்தனன்
எந்தை யென்கணி னத்தவ ராற்றலிற்
றந்த வுன்னர சென்றுத ருக்கிலான்
மூந்தை யுற்றது சொற்றமு ளிந்துநீ'

'கொல்ல லுற்றனை யும்பியைக் கோதவற்
கில்லை யென்பது ணர்ந்துமி ரங்கலை
யல்லல் செய்ய லுனக்கப யம்பிழை
புல்ல லென்னவும் புல்லலை பொங்கினுய்.'

என்று வாலிசெய்த குற்றங்களெல்லா மவனறியுமாறு எடுத்துக் காட்டி யவனைக்கொன்றது நியாயமே எனக்கூறி 'எதிலாரு மெளிய ரென்ருரையுந், தீதுதீர்ப்பதென் சிந்தைக்கருத்தரோ' என்று அவன் கூறியதற்கெல்லாம் தக்க விடைபகர்ந்து அவனுக்கு நீதியுரைத்தபோது வாலிக்குப் பூர்வஞான முண்டாகிக் சுவாமியைப் பலவிதமாயப்

புகழ்ந்து பின்னரவரருளால் நற்கதிபெற்றனன். இராமாயணத்திலிதனைப்பரக்கக்காண்க. யோகமாகிய சிறப்புத்தரும் அணிமா முதலிய செல்வங்களைப் பிறர்க்கின்னாசெய்து பெறலாமாயினும் அதனை யாண்டுஞ்செய்யாமையே மாசற்றார் யாவர்க்குந்துணிவாம். அறிவினானாகுவதுண்டோ பிறிதினோய், தந்நோய்போற் போற்றாக்கடை' துறந்தார்க்குஉயிர் முதலியவற்றை உள்ளவாறறிந்த அறிவினால் ஆவதொரு பயனுண்டோ? பிறிதோருயிர்க்குவரும் இன்னாதவற்றைத் தம்முயிர்க்குவந்தனபோலக் குறிக்கொண்டு காவாவிடத்து குறிக்கொண்டு காத்தலாவது நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல், முதலியதந்தொழில்களாலும் பிறவாற்றானும் உயிர்கள் உறுவனவற்றை முன்னேயறிந்து உறாமற் காத்தல் இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண் நுண்ணிய வுடம்புடைய வற்றைப்பற்றி வருதவிற் பொதுப்படப் பிறிதினோயென்றும், மறப்பான் அது துன்புறினும் நமக்கின்னா செய்தலாமென்றறிந்து காத்தல்வேண்டு மாகலின் அது செய்யாவழி அறிவாற்பயனில்லை யென்றுங் கூறினார்.' என்ற பரிமேலழகர் உரைவாக்கியத்தை கவனித்த ஒருவனும் இன்னாசெய்ய முற்படுவான்கொல்? பிறர்க்கின்னாதவற்றை யொருபகலது முற்கூற்றின்கட்செய்வரேற் றமக்கின்னாதன அதன் பிற்கூற்றின்கண் அவர் செய்யாமல் தாமே வரும். ஆகலின் தம்முயிர்க்கு இன்னாதன வேண்டாரென்பார். பிரிதோருயிர்க்கு இன்னா செய்யாரென்க. ஏனெனில் இன்னாதனவெல்லாம் பிறிதோருயிர்க்கு இன்னாதன செய்தார் மேல் ஆதலா லின்னாசெய்யாமை மேற்கோடல் கற்றறிந்த மாந்தர்கடனாம்,

சே, ரா. தீம்மப்பையன்.
பாலசந்திரபண்டிதன்.

தமிழ்பாஷைச் சிறப்பு.

இவ்விஷயத்தைப்பற்றி நாம சற்றுவிசாரிப்போம். இந்தத் தமிழ் பாஷை வெகுகாலமாக நம் தென்னாட்டில் வேரூன்றிப் பெருந்தொகைஜனங்களால் பரிபாலித்து வழங்கப்பட்டு வருதல் லோகப் பிரசித்தம். அப்பாஷையில் சமுஸ்கிருத வேதாகம முதலிய நூல்களனைத்துமடங்கியிருத்தலைப் பார்க்கலாம். ஆகவே சமுஸ்கிருத பாஷையை இந்நாட்டார் கற்கவேண்டிய அவஸ்ய மில்லாமற்போயிற்று. இதைப் பற்றிச் சமுஸ்கிருத பாஷையைத் தாய்பாஷையாகவும், தமிழ்பாஷையை தந்தைபாஷையாகவும் நம் முன்னோர்முத வீதுகாறுமுள்ள நம்ம

வர்கள் மதித்தே வருகின்றார்கள். சமுஸ்கிருத பாஷையை விடத் தமிழ்பாஷையில் சம்பூர்ணமான சொற்களும், இவற்றிற் கிணங்கிய அகராதியு மமைந்தே யிருக்கின்றன. சமுஸ்கிருத பாஷைக் குறிய அகராதிப் பூர்த்தியாகாமையால் தற்காலத்திய லாகூர் ஆரிய ஸமாஜத் தலைவர் அதைச் சரிவர இயற்றச் சில மஹாபண்டிதர்களை நியமித்திருக்கின்றார். இப்பாஷை நமது தென்னாட்டுக்குள் ஆரியர்கள் நுழையாததற்கு முன்னமே தமிழ்பாஷைச் சிறப்படைந் திருந்ததோடுகூட தமிழர்களும் எல்லா விஷயங்களில் நாகரீகம் பெற்றிருந்தார்களென்பதை இந்தச் **செந்தமிழ்ச்செல்வப் பத்திரிகையின்** வாயலாக வரும் அருமையான விஷயங்களா லறியலாம். சிலநூற்றாண்டுகளுக்கு முன் ஹிமயமலைமுதல் இலங்கைவரையில் தமிழ் பாஷையே நிறைந்திருந்ததைக் கற்றோரறிவார்கள். வடக்கே "ஆப்கான்ஸ்தான்" என்னும் மகமதிய வரசு நாட்டிலோர் நகர் **தமிழக்** என்னும் பெயர் வழங்கிவருவதோடுகூட அந்த நகரில் குடியேறிய மகமதியரும் தங்கள் பாஷையோடு தமிழையும் கலந்து வழங்குகிறார்கள். இத்தகையத் தமிழ்ப் பாஷைக்குப் பூர்வத்தில் தென்னாட்டின்கண் தமிழ்ச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுச் சிறந்த நிலைமையிலிருந்ததை இன்னும் நாம் மறக்கத் தக்கதாயில்லையல்லவா? இந்தத் தமிழ்ப்பாஷையானது கருந்தமிழெனவும், செந்தமிழெனவும் வகுக்கப்பட்டிருப்பினும் நம்ம நாட்டாரனைவரும் செந்தமிழையே மேற்கொண்டுவருதல் நிதரிசநம். இவ்வரியத் தமிழைத் தற்காலத்திற்கற்போர் சிலரேயாவர். பெரும்பாலும் பரிட்சைக்காகத் தமிழைக் கற்கும் வித்தியார்த்திகள் தங்களதுப் பரிட்சைக்கேம்மாத்திரம் தமிழைக் கற்கவேண்டுமோ அம்மட்டும்கற்றுப் பரிட்சையிற் றேர்ந்தபிறகு, அதை முற்று மறந்து விடுதல் சாதாரணம். ஏனெனில் தமிழை வளர்க்கவேண்டிய காரியங்கள் விசேஷமேற்படாமையே.

இன்னுமோர் விபரீதம்: அதாவது இப்போது பெரும்பாலும் ஆங்கிலபாஷை அபிவிருத்தியடைந்துவருவதினால் அதையே அவலம்பிப்போர் தமிழைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் தவறித் தமிழையும் ஆங்கிலத்தையும் கலந்துபேசவும் எழுதவுமாக விருப்பதைப் பற்றி எம்மனோர் நன்கறிவார்கள். இக்கலப்பட பாஷையு மோர்விபரீதபாஷையாக விப்போது ஏற்பட்டுவிட்டது. இதன் விநோதத்தை நான் இங்கு விஸ்தாரிக்காமல் விட்டபோதிலும் விவேகிகள் அதையறிந்து விலக்காதிரார்கள். சாதாரணமாக வடநாட்டார் தங்களது

ஜீவனத்தொழில் தவிர மற்றபொழுதெல்லாம் தங்கள் சுயபாஷையை கைசோர்ந்துவிட்டார்கள். இவ்வாறு நம் நாட்டார் நடவாமையால் செந்தமிழ்ச்செல்வம் குறையலாயிற்று. இதை நாம் ஒவ்வொருவரு மறிந்து நடந்தாலல்லது எவ்விதத்திலும் சுகமில்லை. இதைப்பற்றியே எல்லாம் வல்ல எம்பெருமான் கிருபைகூர்ந்து இந்தச் செந்தமிழ்ச் செல்வப் பத்திரிகையைப் பிறப்பித்து வளர்ந்தோங்கச் செய்தாரென யாம் நம்புகின்றோம்.

திநகரன்.

சத்தமாதர் பூஜாக்கணித வினா.

பதினறடி யாசிரிய விருத்தம்.

சத்தமாதர்க்குநல பத்தியுடனேபூஜை
தான்செய்ய வேண்டுமென்றோர்
தம்பிரான் நந்தவன மெய்தியே யாங்குற்ற
தண்மலர்கள் பலபறித்துத்
தகைமையுட னம்மாதர் குடிகொண்டஆலயஞ்
சார்ந்தவுட னபிராமியின்
சரணினுக் குச்சில மலர்க்களர்ச் சித்தபின்
றகுதியாய் மீந்தமலர்கள்
அத்ததியி ருமடங் காகிட மகேஸ்வரிக்
கக்கணக் குப்படிக்கே
யர்ச்சித்து மீந்தமல ரத்தனையு மூன்றுபங்
காகவே பெருகிடக்கண்
டம்மைகௌரிகருமுற் கணிதமதுபோலவே
யர்ச்சித்து மீந்தமலர்கள்
அப்பொழுது நான்குபங் காகவே கண்டுநம்
அன்னை நாராயணிக்கர்ச்
சுத்தமலர் முன்கணக் குப்படிக் கர்ச்சித்த
தொகைபோக மீந்தமலர்கள்
துரிதமா யைந்துபங் காய்ப்பெருகிடக்கண்ட
தூயவன் வாராகிக்குமே
சுந்தரமதாகமுற் கணிதமுறை யாய்மலர்
சொரிந்தபின் மீந்ததெல்லாஞ்

சோதனையி லாறுபங் காகஇந் தாரணியின்
    றுணையடிக் கக்கணக்காய்ப்
பத்ததிப தாகவே யர்ச்சித்து மீந்தமலர்
    பாங்காக வேழுபங்காய்ப்
பலுகவே காளிக்கு முற்கணித விதமாய்ப்
    பரிவுட னருச்சித்தபின்
பனிமலர்கள் மீதமிலை யாதலாற் றம்பிரான்
    பண்புடன் கொய்துவைத்த
பரிமள மலர்க்கணித் தனையென்று கணிதர்காள்
    பகருவீர் விடையெனக்கே.

வே. முத்தனுசாரி,
ஸ்டேஜ்மானேஜர்.
S. S. S. V. கம்பெனி பழனிஸ்தலம்.

பக்தியினான் முக்திபெற்ற சண்டிகேசுவரர்.

சோழநாட்டிற் றிருசெய் நல்லூ ரென்றோர் திவ்விய க்ஷேத்திர முளது. இஃது 'பொன்னி'யென்னும் காவிரிநதி பாயப்பெற்றுப்பல் வளங்களும் நிறைந்து இந்நாட்டிற்கோர் திலகம்போன்றே விளங்கா நிற்கும். இப்பதியின்கண் ணந்தணரில்ல மதிகமுண்டு.

முன்னொருகாலிவ்வூரில் வேதியர் மாபிற்றோன்றி, சகல சாஸ்திரங்களினும் அளவற்ற தேர்ச்சியையுடைய விப்பிர சிரோன்மணியாய் விளங்கிய எகதத்தரென்பாரு மவர் தம்பத்தினி பவித்திரை யென்பாரும் வெகுகாலம்வரை புத்திரசந்தான மில்லாது வருந்தினர்.

பின்னர் அவர்களது மனக்கவலையை யாற்றுவான்வேண்டி ஈசன் கடைக்கணிக்க அவர்களது தவமே யுருக்கொண்டன்ன கருப்பம் தேவியார் திருவயிற்றினுதித்தது. பின்பம்மாது, சகல சுபலக்ஷணமும் பொருந்திய வோராண்மகவினை யீன்றனள்.

தவவடிவா யவதரித்த திருமதலைக்கு '**விசாரசர்ம**'னெனத் திருநாமமிட்டு, ஊர்ப்பிள்ளைகளைப் போன்று அவர்க் கக்ஷராப்பியாச முதலிய செய்விப்பதில் தந்தையார் மிகவுங் கண்ணுங் கருத்து முடையாராயிருந்தனர். மற்றையோரைப்போ லல்லாத விசாரசர்மன் வேதாப்பியாசஞ் செய்யத்தொடங்கி யைந்தாம் வயதிலேயே யறிவுமிகுந்து பற்

பல நூற்களையு மாராயுந் திறனுடைய ராயினாராதலின், பத்தாமாண்டளவில் கண்டோர் கொண்டாடும் சாஸ்திர ஞானமும் நுண்ணறிவு மவர்க்குண்டாயின.

அந்நாளில், ஓர்மாலை, பொழுது போக்குக்காகத் தம்கூட்டாளிகளுடன்சேர்ந்து ஊர்க்கு வெளிப்போந்தபோழ்து, வழியேயோரிடையன்ஓராவினையடித்து வருத்தக்கண்டவிசாரசர்மர் மனம்பொறாதாராய் அவனிடம் சென்று ஆவினையடியாதொழியச் செய்து, மற்றங்கிருந்தவர்களையு மொருங்கேகூட்டி "பசுவினு மேலானபிராணியேதுளது? ஆதலின் வணங்கற்குறிய கோவினையடித்துத் துன்புறுத்தல் பாதகத்திலும் பாதகம். பசுவே சாந்தகுணபூஷணஜந்து. அன்றியும் கருணைநிதியாங் கடவுளை நாம் பிரதக்ஷிணஞ் செய்யவேண்டிக்கால்களும் தம்மைத்தொழக் கைகளும், வந்தனை வழிபாடுகள் வழங்க வாயும், தம்மைசதா ஸ்மரித்துக்கொண்டிருக்க மனமு மருளினரேயன்றிவேறின்று. ஈசனது பேருதவிக்குத் தக்க நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ள யாம் நம் அவயவங்களை பிறபிராணிகளை யடித்துத்துன்புறுத்தவுபயோகித்தல் அவரது விருப்பத்துக்கு முரணாகவே நடப்பராகின்றேம். நல்வழியில் நடத்தலே அவருடைய வுதவிகட்கு நன்றிபாராட்டலாகும். மேலும் பசுவினை வருத்துவது தெய்வத்தை வருத்துவதொக்கும். அங்ஙனம் செய்தல் பகுத்தறிவுடைய மானிடர்க் கழகன்று" என்றிவ்வாறுக வுபதேசஞ்செய்து, பின்பு தம் தோழர்கள் சூழ வீடுசேர்ந்தனர்.

மற்றைநாள் கோக்களைப் பாலனம் செய்வதினும் மேலாயதொன்றுமின்றென வுணர்ந்தாராய் அவ்வூரின்கணுள்ள சிலரது வீடுசென்று அவர்களிடம் தாம் பசுக்களை மேய்த்துவர வெண்ணங் கொண்டதையறிவித்துச் சிலமாடுகள் விடப்பெற்றுத் தந்தையின் நோக்கையுஞ்சிந்தியாது, தாம் கோபாலனம் செய்தே கடவுளை வழிபடல் வேண்டுமென்ற வொன்றினையே கருதி அவைகளை மேய்த்து வந்தனர்.

விசாரசர்மர் மாடுகளை நன்றாய்ப் பார்த்துவந்தனராதலின், அவை முன்னினுமதிகம் பால்கறக்க வாரம்பித்தன. ஆகவே, நாளடைவில் ஊரிலுள்ள பசுக்கள் யாவுமிவரிடமே விடப்பட்டன. இவரும் அவைகளை யாற்றோரத் தோட்டிசென்று பசும்புல் மேயவிட்டு நன்றாய்ப் பரிபாலிப்பாராதலின், அவ்வையவர்மீது அன்புடையனவாயின. தம்மடியில்பால்மிகுதியும் சுரந்துபோமாதலின் அவையனைத்துந்தாமேகீழே சொரிந்துவிடும்.

இவர் காவிரி மண்ணுங் கோவிலென்ன வமைத்து, அதற்குள் களிமண்ணாலாய விக்கிரகங்கள் வைத்துப் பசுக்கள் தாமாய்ச் சொரியும் பால்கொண்டு அபிஷேகமுதலிய செய்வித்துக் கடவுளை நினைந்து சிறிதுநேரம் நிட்டையிலிருப்பது வழக்கம்.

இப்படியிருக்குநாளில், மற்றைய இடைப்பிள்ளைக ளிவரிடம் பொறாமை மேற்கொண்டு, ஊராரிடம் சென்று "விசாரசர்மன் மாடுகளின்பாலையெல்லாம் கறந்து மண்ணிற் கவிழ்க்கிறான்" என்று கூறினர்.

ஊரார் ஏகதத்தரைவிளித்து, அவரது குமாரன்செய்கைக்கவரே யுத்தரவாதியாதல் வேண்டுமென வறிக்கைசெய்தனர். ஆகவேயொரு நாள் தந்தையார் தனது மைந்தனின் செய்கையை ஓரிடத்திருந்து பார்த்துவந்தார்.

குமாரன் பாலினை மண் விக்கிரகங்களுக்கு அபிஷேகஞ் செய்து பின் நிட்டையிலிருக்கக் கண்டு அவரருகிற் சென்று பலவாறுந் திட்டியும் பயன்பெறாதது கண்ட ஏகதத்தர் கோயிலைக் காலாலுதைத்துத் தள்ளி விக்கிரகத்தையுஞ் சின்னாபின்ன பாக்கி நின்றனர்.

நிட்டை கலைந்த குமாரன் எதிரே யாவு மலங்கோலமாய்க் கிடக்கக்கண்டு "ஆ! இத்தீங்குவிளைத்ததென் தந்தையே யாயினும் தப்பாமல் தண்டிப்பேன்" என்றுகொண்டே யருகிலிருந்த ஓர் தண்டத்தை கைப்பற்ற வஃதும் ஓர் வாளாகமாறியது. அதுகொண்டு தம் தந்தையின் காலினை ஒரேவெட்டாய் வெட்டி நின்றார் விசாரசர்மர்

தம் பக்தனது பக்திவிசேஷத்தினைப் பெரிதும் மெச்சிய வெம்பெருமான் ரிஷபாரூடராய் பார்வதி தேவியுடன் அவர்க்குக் காட்சி கொடுத்தருளி அவரைத் தமதுபுத்திரர்களி லொருவரெனப் பாவித்து எப்பொழுதும் தம்முன்னிலையிலேயே யிருக்குமாறு மாஞ்ஞாபித்துத் தம்பிடம் சேர்த்துக்கொண்டதன்றி யவர்க்கு 'சண்டிகேசுவரர்' என்று பெயரளித்தனரெனின் இவரதுமேன்மையை யென்னென்றுரைப்பது?

ஆஹா! என்னே இவரது பக்தி விசேஷ மிருந்தவாறு! என்னே யிவர் பிராணிகளிடத்து வைத்திருந்த வன்புமாதரவும்! வேதசாஸ்திர நிபுணராய நம் விசாரசர்மர், குற்றமற்ற சாந்த ஜந்துக்களாகிய கோக்களை மேய்த்துவரத் தலைப்பட்டு, எக்குடிப் பிறப்பினும், எவ்வயதினரெனினும், எத்தொழில் மேற்கொள்ளினும், அவ்வபதில் ஆழ்ந்த பக்தியுடையாரயின் அழியாமுக்தி அவரையணுகுவது நிச்சயமென்பதை யான்ம கோடிகட்குத் தெரிவிப்பான் கருதியேயோ?

கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி. S. P. G. College, Trichy.

கையறுநிலை.

மேலைச்சிவபுரியிற் றுஞ்சிய ஸ்ரீமாந் வ. பழ. சா. பழநியப்பச் செட்டியாராகிய சன்மார்க்க அவைத்தலைவரவர்களைப் பாடியவை.

தரை யென்று மொளியாகத் துயங்கியநற் பழநியப்பத் தலைவாநின்றன், கறை யொன்று மில்லாத களிமுகத்தைக் காணாஉநான் கலுழும்போழ்துக், குறையொன்று மின்றுமா னின்றனக்கா மெனப்புகன்ற குணந்தானெங்கே, யிறை யொன்று மில்லாத பறவைபோலானேனே யிசைவதாமோ. (க)

பாவரையும் பாவலர்க்குக் காவலரெல் லாநீயாப் பரிந்துவந்தே, யேவரையும் விடுத்தியா னினையடுத்தே னெனைவிடுத்தா யென்மன்னுவோ, காவரையு மிந்திரனும் புந்திரையும் புகழ்ச்செல்வங் கைத்துப்போனய், சேவரையு முன்பறகன் பியல்பிஃதோ பழநியப்பச் செம்மாலம்மா. (உ)

போற்றெருணாஅப் புகழ்படைக்குந் தமிழ்மாதைமணந்துவந்தபுலவரெல்லா, மாற்றெருணாஅப் பொன்மடைத்துத் தமைப்புரந்த பல்லோரை வரைந்தநாளா, லாற்றெருணாஅத் துயர்க்கடலி னாழ்ந்ததறகோ ரரும்புணையா யமைந்தாயென்றே, பாற்றெருணாஅக் களிப்புற்றார் பழநியப்ப நீயகன்றாற் பகர்வதென்னே. (ங)

மண்ணிறைந்த புலவர்தமை யொருங்கழைஇப் பெருங்குழுவாமகிழ்ந்தெந்நாளு' மெண்ணிறைந்த சன்மார்க்கப் பொதுப்பாவின் றமிழமிழ்தி னினிமைதேர்ந்து, விண்ணிறைந்த புலவருணுஞ் சுவையமுதுந் தேர்ந்தழைக்க விரைந்தாயோவென், கண்ணிறைந்த கவின்பெற்றாய் விண்புகுந்தாய் பழநியப்பக் காவலோயே. (ச)

தன்மார்க்க நின்றுழலும் பகையொதுக்கிக் கலைஞரேந் தமிழ்மாமாதைச், சன்மார்க்க மதிநடத்திக் கற்பினையுங் காத்தளித்த தலைவாநீயே, புன்மார்க்க மில்கற்பு மிறையிறு மென்மொழிக்கும் புகலானயே, யென்மார்க்கம் போந்தாயென் சிந்தையினும் பழநியப்ப வேந்தாலுந்தோ. (ரு)

எண்ணீர்மை யின்னண்பர் கிளைமக்கள் குடியாவா ரெவர்கடாமுகண்ணீர்மை முகங்காட்டிக் கலக்குறவு மிழுக்காகுங் கருணைக்கென்றே, வுண்ணீர்மை யொன்றேனும் புகன்றிலா தகன்றனையா லொருவர்க்கேனுந், தண்ணீர்மை யகலாத பழநியப்ப வள்ளாலே தணப்பதேனோ. (சு)

பொதுநலனே யாவர்க்குங் கடப்பாடாம் புண்ணியமாம் பொரு விலாத, பொதுநலனு மெனத்தெளியப் பொதுவிறையாய்க் காட்டிய வெம் பொருவிலோனே. சுதுமெனநீ மறைந்தனையே பழநியப்பக் காவலோய் காண்டிமீண்டே, யிதுநலனு விசைந்தபொதுத் தொழி லோரைச் சோதிப்பா னெழுந்தாய் கொல்லோ. (எ)

மண்ணைத்தான் மறுவிலாத் தம்பியைத்தான் மக்களைத்தான் மட வில்லாளா, பெண்ணைத்தான் பொன்னைத்தா னன்பரைத்தான் கிளை யைத்தான் பெற்றுயாகுங், கண்ணைத்தான் மறந்தனையே யென்று னும் பொதுநலனுக் கணக்கிலாத, வெண்ணைத்தான் மறந்தாய்கொல் பழநியப்பவேந்தாலோ வெவண்போந்தாயோ. (அ)

அண்ணுலோ மண்ணின்மே னமைந்தகுண நினக்கமைந்த வழ காலென்றும், பண்ணுமேல வாழ்த்துநாற் றிசைப்புலவர் பறவை போற் பழநீயென்றே, விண்ணுலு மதிக்கரிய வருகையையும் விடுத் தகன்று விண்போந்தாயிவ், வெண்ணுமேல விண்புலவர் விருந்தாகப் பழநியப்ப விசைந்தா யென்கோ. (கூ)

ஒருவாத பரிதாபிப் பலனுகப் பழநியப்ப னொருவிப் போந்து, வெருவாது பொதுநலத்தையுயிர்க்குயிரா யுள்ளுணர்த்தவேண்டுவான் போற், பொருவாத மேடப்பூரட்டத்தின் றினத்திங்கட் பொருவி லெங்கட், கருவாதை கழித்தருள்செய் கண்ணுதலோன் மலரடியிற் கரந்தான் வாழி, இங்ஙனம்

சிங்காரவேற்பிள்ளை.
கணேசர் செந்தமிழ்க்கலாசாலைத் தமிழ்ப்போதகாசிரியர்,
மேலைச்சிவபுரி

புத்தகவரவு,

நளச்சக்ரவர்த்தி:— நளச்சக்கிரவர்த்தி என்னும் பெயர்புனைந்த ஒரு நாடகநூலொன்று வரப்பெற்றேம். இஃது இனியதமிழ்நடையில் செய்யுட்களுங் கீர்த்தனங்களும் இடையிடையே யமைத்து நளச்சக் கிரவர்த்தி கதையை விளங்க எழுதப் பெற்றிருக்கின்றது. இந்நூலில் தெய்வபக்தி, ராஜதர்மம், பெண்கல்வி, கைத்தொழில் முதலிய பல விஷயங்கள் ஆங்காங்கு எடுத்துரைக்கப் பெற்றிருக்கின்றன. விளங் காவிடங்களை விளக்கிக்கொள்ள அரும்பதவுரையும் அமைக்கப் பெற் றிருக்கின்றது. இதனையியற்றிய ஆசிரியர் தஞ்சாவூர் ஸெண்டுபீட்டர்ஸ்

ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் வையை R. சுப்பிரமணியஐயரவர்கள் இந்நூலை எமதுபுத்தகசாலைக்கு அனுப்பிய நன்றியைப் பெரிதும் பாராட்டி வந்தனிக்கின்றோம் இப்புத்தகத்தின் விலை அணா 4 இப்புத்தகம் நம்மவர் கொண்டாடற் பலனவாகிய சிறப்புடையது. இதனை நம்மவர் அபிமானித்து இந்நூலாசிரியருக்கு ஊக்கமுண்டாக்குவார்களென நம்புகின்றேம்.

பலதேசவர்த்தமானம்.

அதிசய போலீஸ்நாய்:—ஒடசாவிலுள்ள போலீஸ்காரர் ஸபிற்ஸ் என்ற ஓர் நுண்ணறிவுள்ள நாயைப் பழக்கிவைத்திருக்கிறார்கள் அது கொலைபாதக ஜனவரைக் கண்டுபிடித்ததற்காக அநேக மெடல்கள் தரித்திருக்கின்றதாம். சென்ற ஒன்றரை வருஷங்களுக்குள் ஒன்பது கொலைஞரைக் கண்டுபிடித்திருக்கிறது.

***

மணிக்கு 300-மைல் பிரயாணம்:—அமெரிக்காவில் எமிலி பச்சிலட் என்ற ஒருஎன்ஜினியர் ஒருவர் கடந்த 18-வருஷங்களாக அரும் பிரயாசையெடுத்து ஓர் நூதன ஆகாய விமானம் கண்டுபிடித்திருக்கிறார். அது ஒருநிமிஷத்திற்கு 5 மைல் பறக்கும். இதன் மூலமாய்த் தபால்காகிதங்கள் சாமான்கள் முதலியவற்றைத் தூர தேசங்களுக்கு அனுப்பலாம்

***

புயற்காற்று:—கீழ்வங்காளத்தில் சமீபத்தில் அடித்தபுயலானது இருப்புப்பாதையை சிதைத்துவிட்டது. ஒரு ரயில்வே ஸ்டேஷனும் தூள்தூளாய்விட்டது சிலவண்டிகள் தலைமாறி விழுந்தன. ரயில்வே கம்பனிக்கு பதினாயிரம் ரூபாய் நஷ்டமென்று கருதப்படுகிறது.

***

புதுமதப்பிரவேசம்:—மிஸ்டர் புருக்ஸ் என்னுமொரு ஐரோப்பியர் இரண்டுவாரங்களுக்குமுன் காசியில் ஆரிய சமாஜத்தில் சேர்க்கப்பட்டார் இவருக்குப் பிரமச்சாரி சத்யானந்தர் எனப் பெயர் சூட்டி ஆரிய சமாஜத்தினதிபர் பண்டித் கேசவதேவ சாஸ்திரியார் சடங்குகளை நிறைவேற்றினர்.

***

புதிய அட்வகேட் ஜெனரல்;—இப்போது சென்னையில் ஆனரபிள் மிஸ்டர் சிவசாமி ஐயருக்குப்பின் அட்வகேட்டாக வேலை பார்த்துவரும் மிஸ்டர் நேபியருக்குப் பதிலாக மிஸ்டர் நார்டெட் என்ற பாரிஸ்டரை நியமித்திருப்பதாகத் தெரியவருகிறது.

வீரிய விருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்புபடுத்துவத்தையும்
திரும்ப அடைவதற்கும் உபயுக்தமான
இரண்டு உயர்ந்த ரத்னஒளஷதங்கள்.

மதன மஞ்சரி மாத்திரைகள்.

"நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும்,
ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை."

1. இவை, ஜீரண சம்மந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன.

2. இரத்தத்தைசுத்திகரித்து விருத்தி செய்து தேகத்திற்கு நல்ல திடத்தையும் மேனியையுங்கொடுப்பவை.

3. உடம்பில் ஏற்பட்ட எவ்வித நரம்புத்தளர்ச்சியையும்நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் படுத்துவத்தை அளிக்கத்தக்கவை.

4. கை, கால், கண் எரிச்சலைப் போக்கடித்து மூளையைக்குளிரச்செய்து ஞாபக சக்தியை விசேஷித்து தருபவை.

5. ஸ்திரீகளுக்குண்டாகும் கற்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

நபும்ஸகத்வாரி கிருத்.

இக்காலத்தில் சாதாரணமாக வாலிபர்களுக்கு சகவாஸ தோஷத்தால் ஏற்படும் துராப்பியாசங்களால் உண்டாகும் ஜனனேந்திரிய நரம்புத்தளர்ச்சிக்கும் ஆண்தன்மைக்குறைவிற்கும் கைகண்ட ஒளஷதம்.

2-தோலா கொண்ட டப்பியின் விலை ரூ 1.

எங்கள் ஒளஷதங்களையும்,அவற்றின் ஆச்சரிய முண்டுபண்ணத்தக்க குணங்களையும் குறித்து, அவ்வௌஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மகாராஜாக்கள், ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள், ஜமீந்தார்கள், அமீர்கள் முதலானோர்கள். ஆயிரக்கணக்கானநற்சாக்ஷிப்பத்திரங்கள் நாங்கள் தேடாமலும்,கேளாமலும் அனுப்பி யிருக்கிறார்கள்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றியும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும் ஐசுவரியத்துக்கும் க்ஷேமத்துக்கும் பெரிய வழிகாட்டியாகும்.

இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜராத்தி, முதலிய எந்தப் பாஷையில்வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை இனமாக தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன.

ராஜவைத்திய நாராயண்ஜி கேசவஜி.

புரொப்ரைட்டர் ஆயுர்வேதோதய ஒளஷதசாலா,
No. 177, சைனபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை.

விஷயதானஞ் செய்வோர்பால் ஓர் விண்ணப்பம்.

"செந்தமிழ்ச் செல்வம்" இனி நேயர்களாகிய அபிமானிகளின் விருப்பப்படி புதுமாதிரி வெளிப்படும், ஆகையால் விஷயதானஞ்செய்வோர்கள் சரித்திரசம்பந்தம், பூகோளசம்பந்தம், ககோளசம்பந்தம், சாஸ்திர சம்பந்தம், விவசாய சம்பந்தம், கைத்தொழில் சம்பந்தம், சீர்திருத்த சம்பந்தம், பலதேச வர்த்தமானம் என்னும் தலைப்புகளில் அடங்கத்தக்கதும் "உலகுக்கு நன்மை பயக்கத் தக்கதுமாக எழுதி அனுப்ப வேண்டுகின்றேம்.

தெளிவாகப் பிழையின்றி ஒரேபக்கத்தில் எழுதியனுப்ப வேண்டுகின்றோம். அங்கீகரிக்காத விஷயங்களை திருப்பி யனுப்பப்படமாட்டா. நமது செந்தமிழ்ச்செல்வம் சம்மந்தமாக ஒருவியாபாரப் புத்தகசாலை ஏற்படுத்துகின்றோம். அதற்குத் தயைசெய்து கமிஷன்மேலுக்குப் புத்தகங்கள் அனுப்பி உதவிசெய்யுமாறு வேண்டுகின்றோம்.

மானேஜர்.

செந்தமிழ்ச்செல்வம் ஆபீஸ்,

திரிசிரபுரம்.

EMPIRE OF INDIA LIFE ASSURANCE Coy. (LTD.)

BOMBAY.

Advantages: Purely Indian; Absolute Government Security: Premiums lower than English or Foreign Companies; High Surrender Values; Loans 6%; Quick settlement of claims &c

Please Apply to:—

J. G. GNANADURAI,

S/o Mr. J. GNANAMUTHU B. A.

Puthoor, Trichinopoly.

The Editor of the S. P. G. High School Magazine will be glad to send a copy of April Nnmber to any Old Student of the School on receipt of $2\frac{1}{2}$ anna Stamps.

Subscription for next term (June to December) is **9** ans. including Postage.